விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 யாழ்ப்பாணம் | ஐப்பசி 17 | முஹரம் 4 திங்கட்கிழமை | இதழ் 260 2-11-1981

## வாள்வெட்டு: ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளத் தடியைச்சேர்ந்த என. பிரேமன் (24-வயது) வெட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு ஹோட்டலுக்கு டாக்சியில் வந்த ஒருகோஷ்டியினாலேயே இவர்வெட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாமிராசேந்திரன் என்பவர் வெட்டுக்காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மா)

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த கார் உரிமையாளர் பொன்னம்பலம் ராஜகுலேந்திரன் (35 வயது தாக்குதல் காயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

தாக்குதல் காயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவரை எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

(பண்டிம)

## 5 கடைகள் தீக்கிரை

(கொழும்பு)

பண்டாரவளையில் நேற்று முன்தினம் ஐந்து கடைகள் தீக்கிரையானது இதுதொடர்பாக பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் (ம)

## பாகிஸ்தான் எதிர்க்கும்

இஸ்லாமபாத், நவ 1

"காஷ்மீரிலுள்ள இந்திய-பாகிஸ்தான் யுத்தநிறுத்த எல்லையை தேசிய எல்லையாக்க இந்தியா முயன்றால் அதனை பாகிஸ்தான் எதிர்க்கும்"

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு: தமிழர்கூட்டணி கைவிட்டது!

## எம்.பி.க்கள் நாளை பாராளுமன்றம் செல்வார்கள்

(நமதுநிருபர் ஏ. வி. மாணிக்கம்)

பகிஷ்கரிப்பைக் கைவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும் என்று நேற்றுநடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் கூட்டணி காரியாலயத்தில் நல்லூர் எம். பியும் கூட்டணித்தலைவருமான திரு எம் சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் சுமார் 70 பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பட்டிருப்பு எம். பி. திரு. பி. கணேசலிங்கம், கிளிநொச்சி எம் பி. திரு. வி. ஆனந்தசங்கரி, பருத்தித்துறை எம். பி. திரு கே துரைரத்தினம், ஊர்காவற்துறை எம். பி. திரு எக்ஸ். எம். செல்லத்தம்பு ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

உடுப்பிட்டி எம். பி திரு கே. இராசலிங்கம், மன்னார் எம் பி திரு எஸ். சூசைதாசன், கோப்பாய் எம். பி. திரு எம் ஆலாலசுந்தரம் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளதால் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை

### தமிழ் இளைஞர் பேரவை

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், பன்னீர்ச் செல்வம் மற்றும் தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த திருமதி வள்ளலட்சுமி பொன்னுத்துரை. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### ஆரம்பத்தில் ஆட்சேபம்

கூட்ட ஆரம்பத்தில் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் சிலர் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதை ஆட்சேபித்தார்கள் தற்போது மக்கள் அடைந்து வரும் கஷ்டமான சூழ்நிலையில் பகிஷ்கரிப்பைக் கைவிடுவது நல்லதல்லவென்றும் அவர்கள் கூறினார்கள்.

### இராணுவ துன்புறுத்தல்கள்

இராணுவத்தினரின் நடவடிக்கைகளையும், தமிழ் மக்கள் அடைந்துவரும் துன்பங்களையும் உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்கு பாராளுமன்றம் செல்ல வேண்டியது அவசியமென்று உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத் தாக்குதல்கள் பாராளுமன்ற பதிவேட்டில் பதிவுபெறுவதால் அவற்றை வெளிநாட்டவர்கள் அறிந்து கொள்வார்களென்றும் அவர் கூறினார்

மாற்றுத் திட்டம் தயாரிக்காமல், கூட்டணி எம். பிக்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதால் எவ்வித பயனுமில்லையென்று தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி உறுப்பினர்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி-ஜனாதிபதி இன்று சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி-கூட்டணித்தலைவர்கள் உயர்மட்டப்பேச்சு வார்த்தைகள் இன்றிரவு தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

இப்பேச்சுவார்த்தையின் போது ஆலோசித்துவரும் சில விஷயங்கள் பற்றி முடிவு எடுக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

## ஆனையிறவு தடைமுகாமில் வவனியாஎம்.பி.விசாரணை

(ஆனையிறவு)

வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரமும், அவருடன் காரில் வந்தவர்களும் நேற்றுக் காலை ஆனையிறவு தடைமுகாமில் வைத்து இராணுவத்தினரால் சுமார் ஒரு மணி நேரம் விசாரணை செய்யப்பட்டனர்.

நல்லூரில் நடந்த கூட்டணி பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வவனியா எம் பி. யுடன் வவனியா அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சிற்றம்பலம், நகரசபைத் தலைவர் திரு. கேதீஸ்வரன், மற்றும் பொதுச்சபை உறுப்பினர்கள் காரில் வந்த போதே இவ்விசாரணை நடைபெற்றது.

இராணுவத்தினர் காரைச் சோதனையிட்டதுடன் சுமார் ஒருமணிநேரம் இவர்களை

(6-ம் பக்கம் பார்க்க)

## "பிரிவினைக்கோரிக்கை கைவிடப்பட்டது"

(யாழ்ப்பாணம்)

25 வருட காலமாகப் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தி வந்த லங்கா - பாரத ஐக்கிய முன்னணி அமைப்பாளர் டாக்டர் ஏ தர்மலிங்கம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளார்.

1954-ம் ஆண்டுமுதல் இவர் இருநூற்றுக்கும் மேற்பட்ட அறிக்கைகள் மூலம் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் அபயசிறி பேக்கரி தாக்கப்பட்டது!

### வர்த்தகர் சங்கம் புகார்

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் "றக்" ஒன்றில் வந்த கோஷ்டி ஒன்று பண்டத்தரிப்பு சந்தியில் நடத்திய திடீர்த் தாக்குதலில் மாதகலைப் பகுதியைச்சேர்ந்த சிங்கள வயோதிபரால் பண்டத்தரிப்பு பகுதியில் நீண்டகாலமாக நடாத்தப்பட்டுவரும் 'அபயசிறி' பேக்கரி ஒன்றும் பலத்த சேதத்துக்குள்ளானது.

சோக்கேன் ஜீப்வண்டிகளில் போந்தவர் மேற்படிகோஷ்டியினரால் அடித்து நொருக்கப்பட்டதுடன் பேக்கரி வேலைசெய்து வந்த சிங்கள வாலிபர் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டாராம்.

பக்கத்திலுள்ள மற்றும் இரு கடைகளும் இக்கோஷ்டியினரால் தாக்குதலுக்குள்ளானதாம்.

தினமும் பண்டத்தரிப்பில் நடைபெற்றுவரும் இத்தாக்குதல் சம்பவங்களினால் மாலை ஆறு மணிக்கு பின்பு மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்துள்ளதுடன் கடைகள் யாவும் மூடப்படுகின்றன.

இத்தாக்குதல் சம்பவம்பற்றி பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் யாழ். பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளது அத்துடன் யாழ். அரசாங்க அதிபர், யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு எஸ். நடராசா ஆகியோரிடமும் நேரடியாகச்சென்றுபுகார் செய்வதென்று இன்று அவசரமாக கூடிய பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது. (ம)

# கோரிக்கைநிறைவேறுவிடின் சாத்வீகஎதிர்ப்புநடவடிக்கை

## கூட்டணி பொதுச்சபை கூட்ட முடிவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"கூட்டணி சமர்ப்பித்த ஐந்து கோரிக்கைகளில் அரசாங்கம் 4கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நியாயமான கால எல்லைக்குள் அவற்றை நிறைவேற்றத் தவறினால் சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கை செயல்படுத்துவோம்."

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம், கூட்டணிப் பொதுச் சபைக் கூட்ட முடிவில் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அட்டூழியம் தலைவிரித்தாடிய போது நூல் நிலையமும் வேறு கட்டிடங்களும் எரிக்கப்பட்ட சூழ்நிலையில் நாம் சமர்ப்பித்த 5 அம்சக் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை அரசுக்கும் உலகுக்கும் வலியுறுத்தும் பொருட்டு த. வி. கூட்டணி பாராளுமன்றக்குழு பாராளுமன்றத்துக்குச் செல்வதில்லை என்றும் சட்டவாக்க நடவடிக்கைகளில் பங்குபற்றுவதில்லை என்றும் தீர்மானித்தது

"5 அம்சக் கோரிக்கைகளில் 4 அம்சக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அவ் வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் இலங்கையின் பல பாகங்களில் பரவலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று இப்போதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இச்சூழ்நிலையில் அரசாங்கம் தனது வாக்குறுதியை நிறைவேற்ற சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு வகுப்பு வெறிவன்முறைச்சம்பவங்களினால் நாடு முழுவதிலும் தமிழ் மக்கள் அடைந்துவரும் துன்பங்களின் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளினால் தொழிலாளர்களும் ஏழை மக்களும் அடையும் துன்பங்களையும் பாராளுமன்றத்தில்

(6ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

தன்னைத்தானே உயர்த்திக்கொள்கிறவன் தாழ்த்தப்படுகிறான்; தன்னைத்தானே தாழ்த்திக்கொள்பவனே உயர்த்தப்படுகிறான்.

—பைபிள்

# நமது நோக்கு

## நஷ்டஈடு

நஷ்டஈடு என்றால் நம்பிக்கையற்ற விடயம் என்பது யாழ்ப்பாணமக்கள் மனத்தில் குடிகொண்டிருப்பது நியாயமே.

1977 இனக்கலவரத்தில் நிகழ்ந்த சேதங்களை விசாரித்த சன்சோனி கமிஷனில் தமிழ்மக்கள் பெருநம்பிக்கை வைத்திருந்தனர். ஈற்றில் அது 'புஸ்' வாணமாகப் போய்விட்டதென்று பலர் முடிவுகட்டிவிட்டனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பான நஷ்டஈடு குறித்து இன்று விசாரணைகள் ஆரம்பமாகிவிட்டதே ஒரு நற்செய்தி. முந்திய அவநம்பிக்கைக்கு ஒரு மாற்றுமருந்தா?

அதற்குமேலாக, நஷ்டஈட்டு விசாரணைக் குழுவின் தலைவர் திரு. லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாண மக்களின் பெருநம்பிக்கையையும் பெருமதிப்பையும்பெற்றவரென்பது பகிரங்க இரகசியம்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக அவர் கடமையாற்றியகாலத்தில் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற பாங்கில் நீதியைக் கடைப்பிடித்து பிரச்சினைகளைத் தணித்தும் தீர்த்தும் வெற்றிகண்ட நிதானமான அதிகாரியென்று பாராட்டப்பெற்றவர்.

இத்தகைய நேர்மையும் திறமையும் உள்ள அதிகாரிகள் நாட்டில் குழப்பத்தைத் தடுக்கவும், அதனைத்தீர்த்து வைக்கவும் வல்லவர்கள். அவர்கள் நல்லவர்களாயுமிருந்துவிட்டால் மக்களுக்கு அது ஒரு வரப்பிரசாதம்.

நஷ்டஈடு என்ற விடயம் எம்மைப் பொறுத்தளவில் ஒரு நாணம் ஊட்டும் விடயம் எங்கள் ஸ்தாபனமே பெருநஷ்டத்துக்கு உள்ளானது. நாடு மட்டுமல்ல உலகமே அறிந்தபுதினம். இருந்தும் நாம் அது காரணத்தால் நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்கள், ஆயிரக்கணக்கான மக்கள் பெருஞ் சேதத்துக்குட்பட்டவிடயம் பற்றி மௌனம் சாதிப்பது கடமையிற் தவறியதாகக் கருதப்படும்.

விசாரணையில் நேர்மை, நிதானம், அனுதாபம் போதியளவிற்கு இடம் பெறுமென நம்புகின்ற அதேவேளையில், இந்தச் சம்பவங்களின் பின்னணி விசாரணைக்குழுவின் கவனத்துக்கு தக்கமுறையில் விளக்கப்படவேண்டு மென்பதை வற்புறுத்துகின்றோம். மனுக்களில் காணப்படும் தொக்கப்பயத்திலிருந்து நீக்கும் திறமை குழுவுக்கு உண்டு.

ஒருசமூகத்துக்கெதிராகத் திட்டமிட்ட செயல்கள் இவையென்பது உண்மையானால் அதற்குரிய ஆதாரங்கள் தெளிவாக்கப்படவேண்டும்.

எந்த விசாரணைக்குழுவும் இத்தகைய நஷ்டங்களால் ஏற்பட்ட உயிர்நட்டம் மனத்துயரம் போன்ற அசாதாரண அழிவுக்கு ஈடு கொடுக்க முடியாதென்பது தெரிந்ததே இருப்பினும் அனுதாபத்துடனும் சமத்துவ புத்தியுடனும் விசாரணை நடைபெற்றால் தனிப்பட்டவர்கள் மட்டுமல்ல ஒரு சமூகமே தலைக்கேற்பட்ட பாரிய "புண்ணை" மாற்றிக் கொள்ள வழி பிறக்கும்.

அன்றாடவாழ்க்கைக்கு தன் சிறுதொழிலில் நம்பியிருக்கும் பல ஏழைமக்கள் பயனடைவார்கள். நியாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கும் அனைவரும் ஒரு புதிய திருப்பத்தைக்காண இக்குழு செயற்படவேண்டுமென்று கோருகின்றோம்.

# சிங்கை ஆட்சித் சிறப்பு

சிங்கப்பூரின் ஜனாதிபதி பதவிக்கு தொழிற் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டது சரித்திர முக்கியத்துவமான சம்பவமாகும்.

தொழிற் சங்கங்களும் அவற்றின் தலைவர்களும் இன்று உலகெங்கும் எதிர்நோக்கும் தொல்லைகளுக்கு இந்தத் தேர்வு ஒரு உற்சாகம் ஊட்டும் செய்தியாகும்.

இருப்பினும் சிங்கப்பூர் புதிய ஜனாதிபதி திரு சி. வி. தேவன் அவர்கள், இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைப் போன்ற நிறைவேற்றும் அதிகாரமுடைய ஜனாதிபதி அல்லர். ஆட்சியின் பொறுப்பதிகாரம் முற்றிலும் பிரதமர் திரு. லீ. குவான்யூ அவர்களின் கையிலேயே உண்டு.

ஜனநாயக ஆட்சியென்றும், பெருமுன்னேற்றம் கண்ட ஆட்சியென்றும் போற்றப்படுகின்ற சிங்கப்பூர் அரசு ஆட்சியின் வெற்றிக்கு, எதிர்க்கட்சி இல்லாததே பெரும் காரணமாகப் பெருமை பேசிவந்தது.

சிங்கைப் பிரதமர் இட்டது சட்டம். சட்டத்தை எதிர்த்து "முச்சுக்காட்டுகின்றவர்' மறியலறையில் வாசஞ்செய்வது வழக்கமாகிவந்தது.

மக்கள் நடவடிக்கைக் கட்சியின் தலைவரான பிரதமர் திருலீ குவான் யூ ஆட்சி எவ்வித எதிர்ப்புமின்றி தளம்பலின்றி சமாதானமாக மக்கள் நலனை வளர்த்து வருவதாக கூறி வந்தார்.

கடந்த இடைத்தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் திரு ஜெயரத்தினம் அவர்கள் ஆறுவது தடவையில் தமது கட்சிக்கு வெற்றி பெற்றுக் கொடுத்திருப்பது ஒரு புதிய திருப்பத்தைக் குறிக்கின்றதா?

ஜனநாயகத்தின் அச்சாணி எதிர்க்கட்சி என்பது ஒரு முடிந்த முடிபு. சோஷலிச நாடுகளை நாம் இந்த வரைவிலக்கணத்தில் குறிப்பிடவில்லை.

ஒற்றையாட்சி சர்வாதிகார ஆட்சி என்பது குழந்தைக்கே புரியும் உண்மை. எதிர்க்கட்சி ஒருவராயிருந்தாலும் அவருடைய கருத்துக்குச் செவிசாய்த்தல் சிங்கப்பூர் ஆட்சிக்கு நன்மை தருமென்பதே எமதுநம்பிக்கை.

# "வேலுந்திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே"

சிதம்பரசுவாமிகள் தாம் கண்ட திருமுகதரிசனத்தைப் பாடும்போது "வேலைக்கண்டேன், தோளில் வியன் சதங்கை மொய்திருந்த கால் கண்டேன், ஆறுமுகங்கண்டேன்," என்பர். இன்னும் "வேலாகுணசீலா கலைலீலா விடைப்பாகன் பாலா திருப்போரூர் வளம்பதியா" என்றும், வேலும் சேவலும் விரிசிறை மயிலும் வெற்றிசெய்த கரேறும்" என்றும், வேலும் மயிலும் விளங்குஞ் சிறுசதங்கைக் காலும் ஈராறுகண் தோளும்- சால அருளுகவும் ஆறுமுகமுன போரூர்ப் பொருள் நம்து நெஞ்சமே போற்று" என்றும் வேல் வியந்து போற்றுவர்.

முருகப் பெருமானின் திருக்கரத்தில் உள்ளவேல் தனியாற்றல்வாய்ந்தது. அதனையே முருகப் பெருமானின் அம்சமாகக்கருதி அதற்குக்கோயிலமைத்து வேற்கோட்டம் என வழங்கி வழிபட்டுவரும் வழக்கம் பண்டைக்காலம் முதலாக நிலவி வருகிறது. முருகப் பெருமானுக்கேயுரிய வேலாயுதத்தைப் படையரசு என்றும், சக்திபடைத்தெய்வம் என்றும், கதிர்வேல் என்றும் பக்தர்கள் பெரியவர்கள் போற்றுவர். சைவத்திருமுறைகவிலொன்றான திருவிசைப்பாவில் சேந்தனார் "வேலுதாந்தடக்கை வேந்தனென் சேந்தன்" என்று பாடிவருயுள்ளார்.

## 'நமக்கு வேலே'

சைவ எல்லப்ப நாவலர் என்னும் பக்தர் தாம் பாடிய செவ்வந்திப் புராணத்தில் "வேலை வணங்குவது நமக்கு வேலே' என்று வேலைப் போற்றியுள்ளார். வேல் வெற்றிக்கு அறிகுறியாயுள்ளது. எனவே தான் அதனை "வாகைவேல்' சுமக்கும் வேல்' என்பர். அந்த வேலுக்குத் தான் எத்தனை புகழ்ச்சி, வணக்கம், போற்றுதல்.

கதிர்வேல், கொற்றவேல், சக்திவேல்,ஞானவேல், மெய்ஞ்ஞான அயில், வீரவேல் எனப் பன வேலுக்குப் பக்தர்கள் கொடுத்த அடைமொழிகள். முருகப்பெருமானின் வேலைத் தனிவேல் என்று அருணகிரிநாதர் பலவிடங்களிற் போற்றியுள்ளார். முருகப்பெருமானின் திருநாமவலியில் சக்திதராயமை என்னும்தொடர் மிகவும் சிறந்தது. வேலே விளங்கு கையான் என்பது கந்தரலங்காரம்.

வேல் பகைமையன்றி. மயக்கத்தைச் செய்வனவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் அழிக்கும் அற்புதத்தன்மை வாய்ந்தது. அதை நாயகமாவது ஒரு தனிச்சுடர் வேல் என்று கச்சியப்பர் பேசற்றுவர். நாயகம் என்றால் நடத்துவது பொருள் என்று ஞானியார் சுவாமிகள் நயம்கூறுவர். அது தெய்வச் செவ்வேல் செவ்வேளின் தன்மையெல்லாம் செவ்வேலிற் கண்டு தேவரெல்லோருந்தொழுதனர் என்கிறார் கச்சியப்பர்.

### க. சி. குலரத்தினம்

முருகன் குங்குமவர்ணன் செவ்வானம் போன்றவன், சந்திக்காலத்தின் செந்நிறத்தவன் என்றெல்லாம் அருளாளர் போற்றுவர். வேல் கலக்கத்தை ஒழிக்கும் துன்பத்தைத் துடைக்கும் எமபயம் நீக்கும், அச்சம் அகற்றும் வழித்துணையாகும். பகையைப் போக்கும் இன்பத்தைத் தரும் என்றெல்லாம் பக்தி நெறியாளர் பாடுவர். அச்சம் அகற்றும் அயில் வேல்" என்றும் வேலுந் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே" எனவருந்தொடர்கள் வேலின் துணையை வியந்து போற்றும். விலையோட விடுங் கதிர் வேல் போற்றி போற்றி எனக் கந்தபுராணமும், வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி அயிலெடுத்து வருஞ்செவ்வேளைச் சிந்திப்போம் மலரணிவோம் அவர்கமலத் தாளும் தோளும் சிந்திப்போம்" என்று வினைகள் யாவும் சிந்திப்போம் வழியைத் திருவிரிஞ்சைப் புராணம் பாடுகிறது.

## குறிஞ்சிக்கிழவன்

முருகப்பெருமானின் குன்றுதோறாடல் பணியினை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் ஐந்தாம் படைவீடாகப் பாடியுள்ளார்; முருகன் எல்லாமலைகளிலும் விளையாடி வருபவன். இக்கருத்தையே பல மலையுடைய பெருமாள் என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார். முருகன் குறிஞ்சிக் கிழவன் மலைகிழவோன். பதியெங்கிலுமிருந்து விளையாடிப் பல குன்றிலும் அமர்ந்த பெருமாள என்பது அருணகிரிநாதர் வாக்கு. அவரின் திருவடித் தோய்வால் வெங்காடும் புனமும் கமழும் என்பர்.

குன்றுதோறும் எழுந்தருளும் முருகனைக் கண்ட நக்கீரர் அவன் சிவந்த மேனியன் சிவந்த ஆடையன் சிவந்த அசோக மரத்தின் தளிர்களைக் காதில் சொருகியவன், அரையில் கச்சணிந்தவன், காலில் வீரக்கழலணிந்தவன், வெட்சி மாலையைத் தலையிலணிந்தவன், குழல் கொம்பு முதலிய கருவிகளை இசைப்பவன், மயில் ஆடு ஆகியவற்றை ஊர்தியாகக் கொண்டவன் குற்றமில்லாத சேவற்கொடியினை உயர்த்தியவன் மலைவாழ் மக்களோடு குரவைக் கூத்தாடுபவன். குன்றுதோறும் குரவைக் கூத்தாடுதல் முருகனின் நிலைபெற்ற பண்பாகும்.

எக்கெங்கே அழகும் தூய்மையும் உள்ளனவோ அங்கெல்லாம் முருகன் எழுந்தருளுவன். அவன் குன்றுதொறுடும் பழக்கத்தில் சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, விராலிமலை, திருத்தணி, கதிரைமலை, திருவண்ணமலை, திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கழுக்குன்றம், திருக்குற்றாலம், கொடுமுடி முதலாவுள்ள மலைத்தெய்வம்.

முருகப் பெருமானுக்குக் கார்த்திகை உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறும் தலங்களுள் திருத்தணிகையும் ஒன்று. திருத்தணிகையில் முருகப் பெருமான் சாந்தரூபியாயுள்ளார் எனவே அங்கு வழிபாடுசெய்வதற்குப் போகும் அடியார்களும் அச்சந்தவிர்த்து மீள்வர். தேவர்கள் அச்சந்தவிர்த்த தலம் அது.

திருத்தணிமலையை அழகு திருத்தணிமலை என அருணகிரிநாதர் அருளுவர். அருணகிரிநாதர் திருத்தணிக்குப் பாடியருளிய திருப்புகழ்களும் திருத்தணிகைப் புராணம் பெருமைவாய்ந்தது பீடுநடையுடையது. அதற்கு உரை காண்பது அருஞ் செயல் எனப்புலவர்கள் தயங்கிய காலத்தில் யாழ்ப்பாணத்து இணுவில் அம்பிகைபாகர் அதற்கு அருமையான உரை கண்டுள்ளார். திருத்தணி முருகப் பெருமானுக்குப் பலவகைப் பிரபந்தங்களை பாடிய பெரியவர் திருத்தணிகைக் கந்தப்பதேசிகர் என்பவராவர்.

## ஈழத்தில் முருக தலங்கள்

ஐந்திணைப் பகுப்பில் அழகிய குறிஞ்சி நிலத்திற்கு முருகன் அதிதெய்வம். முருகனைப்போற்றும் நூல்களுக்குஅளவேயில்லை. எத்தனை புராணங்கள். எத்தனை பிள்ளைத் தமிழ்கள் எத்தனை கலம்பகங்கள். எத்தனை உலாக்கள், எத்தனை அந்தாதிகள், எத்தனை பிரபந்தவகைகள், எத்தனை தனிப்பாடல்கள், காவடிச்சிந்துகள், முருகன் வடநாட்டுக்குக் கார்த்திகேயன், வடமொழியிலும் முருகனுக்குப் பல நூல்கள். முருகனைப் பிறநாட்டாரும் பிறமதத்தவரும் வெகுவாகப் போற்றித் தங்கள் தாய்மொழியில் பல நூல்களை எழுதியுள்ளார்கள் 'ஓம் முருகா' என்று வாயாரத் துதிக்கும் ஐரோப்பியர், அமெரிக்கர், ஆங்கிலேயர் தொகை அதிகம் ஈழத்துக் கதிர்காமம் உலகப் புகழ்பெற்ற திருத்தலமாகும் அந்த மலை இந்தமலை அண்ணாந்து பார்த்த மலை எங்கள் கந்தன் இருக்கும் மலை கதிர்காமமலையே என்று நாடோடியாகப் பக்தர்கள் பாடுவர் கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே கற்பூர ஒளி காணாக் கண்ணென்ன கண்ணே என்று சோமசுந்தரப்புலவர் பாடியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் தீட்சைபெற்ற சுவாமிநாததேசிகர் தசகாரியம், இலக்கணக்கொத்து முதலிய நூல்களைச் செய்து புகழ்பெற்றவர். அவர் திருச்செந்திற் கலம்பகம் பாடித் தம் முருகபக்தியை நாமறியச் செய்துள்ளார். இம்மடத்திலே தீட்சைபெற்ற கச்சியப்ப முனிவர் திருத்தணிகைப் புராணம் பாடியவர். அதன்பின் திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். திருச்செந்தூரப்பிள்ளைத்தமிழ் பாடியவர் பகழிக்கூத்தர். திருமலை முருகனுக்குப் பிள்ளைத்தமிழ் பாடியவர் கவிராஜ பண்டாரத்தையா என்பவராவர். அந்தக்கவிவீரராகவ முதலியார் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். மார்க்கசகாய தேவர் என்பார் திருக்குஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

முருகப்பெருமான் திருவிளையாடல் செய்தருளும் திருக்கோயில்கள் ஈழத்திருநாட்டில் அதிகமாகவுள்ளன வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வேற்கோட்டங்கள் பலவுள. முருகனாலயங்கள் பலவுள. தெற்கில் கதிர்காமக்

(6-ம் பக்கம் பார்க்க)

# சம்பத்திரிசியார் முத்தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி தனிநாயகம் முத்தமிழ் விழா இம்மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த மாதம் 19ம் திகதி நடைபெறவிருந்த இவ்விழா நாட்டு நிலைமைகள் காரணமாகப் பின் போடப்பட்டது.

# நூல் மதிப்பீடு: தமிழ் இலக்கிய வினாவிடை

(க.பொ.த. ப.(சா/த) வகுப்பு)

காரைநகர்த்தமிழ்வளர்ச்சிக் கழகத்தினர் வெளியிட்ட இந்நூல், வருகிறடிசெம்பர்மாதப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ஒருவரப்பிரசாதமாகும். இந்நூலில், கம்பராமாயணம்- காட்சிப்படலம், பாரதச்சுருக்கம், நாட்டார் பாடல்கள் என்னும் நூல்களோடு தொடர்புள்ளசிந்தனையைத் தூண்டும் வகையிலான வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் காணப்படுகின்றன விடைகள்தெளிவாகவும், சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. 'சந்தர்ப்பத் தொடர்களும்,பாரதகதாபாத்திரங்களின் குணவியல்புகளும் மாணவர்கள் தாமாகவே விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் நன்கு விளக்கப்பட்டிருப்பது இந்நூலுக்குரிய ஒரு சிறப்பம்சமாகும். தக்க தருணத்தில் வெளிவந்திருக்கும் இந்நூல் மாணவர்களுக்குக் கைகொடுத்துதவுமென்பது ஒருசிறிதும்மிகையாகாது.

பண்டித. வித்துவான்

இ. திருநாவுக்கரசு,

அதிபர்,

வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்.

# புற்றுநோய் சிகிச்சைநிலையம் விரைவில் வேண்டும்

## யாழ். முதல்வர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் கால தாமதமின்றி நிறுவவேண்டும் என்று யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. ச. ஆறுமுகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகையில் யாழ். மாநகரமுதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

இலங்கையில் உள்ள ஒவ்வொரு நூறுபுற்று நோய் நோயாளிகளிலும் பன்னிருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு புற்றுநோய் வைத்தியசாலை இங்கில்லை.

யாழ்ப்பாணத்துக்கு என்று விசேடமாகத் தருவிக்கப்பட்ட கருவிகளும் இடைக்காத நிலைமை.

புற்று நோய் இன்று நீண்ட பரவலாகவும் வேகமாகவும் பரவி வருவதை நாம் அறிவோம் அதிலும் யாழ்ப்பாணப் பகுதியில் அதன் தாக்கம் நூற்றுக்கு 12 வீதம் என அறிய வரும்போது யாழ்ப்பாணத்தில் பூரணத்துவம் வாய்ந்த புற்று நோய் வைத்தியசாலை ஒன்று நிறுவப்பட வேண்டிய அவசியத்தை மறைந்த அங்கத்தவர் ஆறுமுகம் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து இச்சபையில் வலியுறுத்தியிருந்தார்.

அவருக்கே பின்னர் அந் நோய் ஏற்பட்ட போதிலும் அவரும் மகரகம வைத்தியசாலைக்கே செல்லும்படியாக நேர்ந்தது பெரும் துர்ப்பாக்கியமே.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த புற்றுநோயாளர்கள் இங்குதானே வைத்தியம் செய்விக்கக்கூடிய வாய்ப்பை இனிமேலாவது காலதாமதமின்றி அரசு ஏற்படுத்தித்தரவேண்டும் என்று முதல்வர் கேட்டுக்கொண்டார். (மா)

---

# "பாவனையாளர்சங்க சமாசம் சர்வதேச ஒன்றியத்துடன் இணைந்ததும் நிதிகிடைக்கும்'

## உதவி ஆணையாளர் தகவல்

(சாவகச்சேரி)

"அரசாங்கங்கள் மாறிமாறி ஆட்சிக்கு வரலாம். எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் எங்கள் பொறுப்புக்களை நாம் திறம்படச் செய்யவேண்டும்."

சாவகச்சேரி 23 கிராமசேவகர் பிரிவு பாவனையாளர் சங்கப் பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றுகையில், யாழ். உணவுக் கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் த. மார்க்கண்டு மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் கந்தோரில் அதிபர் கே. துரைராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

"இரு பிள்ளைகளையும் வயோதிபர்களையும் சட்டவிரோதப் படிகள், அளவு குறைவு என்பனவற்றுக்கு வியாபாரிகள் ஏமாற்றப்பார்ப்பார்கள்; இவ் விடயத்தில் நீங்கள் விழிப்பாக இருக்கவேண்டும் சமூகசேவை செய்ய முற்படும்போது பல கோணங்களிலிருந்து எதிர்ப்புக்கள்வரும்; நீங்கள் அவற்றைச் சமாளிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். நீங்கள் எல்லோரும் நீதிமன்றம்வரை ஒருவரோடொருவர் ஒத்துழைக்க வேண்டும். பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகளில் மாற்றம் ஏதாவதுக்குக்காலம் ஏற்படும்பொழுது அவற்றை நீங்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிற் சென்று பார்வையிடவேண்டும்.

"உங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தைக்கொண்டு நீங்கள் வியாபாரிகளுக்கு கரைச்சல் கொடுக்கக்கூடாது. வியாபாரிகள் பொருட்களைக் கூட்டி விற்பனை தவிடக் கப்பட்டம் மிக ஆபத்தானது இவற்றை நீங்கள் கவனமாகப் பார்வையிடவேண்டும். உதவாத பொருட்களை விற்பனை செய்ய அனுமதிக்கக்கூடாது சர்வதேச ஒன்றியத்துடன் எங்கள் சமாசம் இணைந்தவுடன் போதிய நிதியுதவியை நாம் பெறக்கூடியதாகவிருக்கும்."

உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா பேசுகையில், இச் சங்கங்களின் அதிகாரங்களிலும் கூடிய அதிகாரம் இந்தாய்ச் சங்கத்திற்கிருக்குமென்றும் நீங்கள் விழிப்பாகவிருந்தால் மக்களுக்கு மலிவான விலையில் பொருட்கள் கிடைக்க வகை செய்யலாமென்றும் குறிப்பிட்டார்.

தலைவராகச் சட்டத்தரணி எஸ். கே. திரவியநாயகமும், உப தலைவராக த. இதையரப் பிள்ளையும், காரியதரிசியாக எஸ். சின்னத்தம்பியும், பொருளாளராக டீ ஜே. பொன்னுத்துரையும், மேலும் மூன்று நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (—)

---

சாவகச்சேரி

# லயன்ஸ்கழக ஆதரவில் ஐ.நா. சபை மாதிரிக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆதரவுடன் சாவகச்சேரி கல்வி அபிவிருத்தி மூலவளநிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஐக்கியநாடுகள்சபை மாதிரிக் கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடந்தது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரும் லயன்ஸ் கழகத் தலைவருமான திரு கே துரைராசா ஐக்கிய நாடுகள்சபையின் தலைவராகவும் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் கௌரவ பொதுச்செயலாளர் நாயகமாகவும் கடமையாற்றினார்கள்.

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள பிரதான பத்துப்பாடசாலைகளான சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சோவியத் ரஷ்யாவாகவும், டிறிபேக் கல்லூரி ஸ்ரீலங்காவாகவும், வீரசிங்கம் மகாவித்தியாலயம் அமெரிக்காவாகவும், மட்டுவில்மகாவித்தியாலயம் ஐக்கிய ராச்சியமாகவும், உசன் இராமநாதன்வித்தியாலயம் பிரான்ஸ் ஆகவும் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம் சீனாவாகவும், வரணி மகாவித்தியாலயம் கனடாவாகவும், மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம் லண்டனாகவும் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் பங்களாதேஷாகவும் நாவற்குளி மகாவித்தியாலயம் இந்தியாவாகவும் பாவனை செய்து ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்து இவ்விரண்டுமாணவர்கள் விவாதத்திற்கு கலந்துகொண்டனர்.

இதில் பங்குபற்றிய மாணவர்களுக்குச் சாவகச்சேரி லயன்ஸ்கழகம் சார்பில்முன்னாள் நாரபிதா எஸ். கே திரவியநாயகம் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கினார். (க)

---

# சிறைக்காவலாளி தாக்குதலுக்குப் பலி!

(கொழும்பு)

கொழும்பு, விளக்கமறியல் சிறைச்சாலையைச் சேர்ந்த காவலாளி தலையில் பலமாக அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஜெய்னுதீன் என்ற 46 வயது உடைய காவலாளியைக் காலையில் சக காவலாளியொருவர் எழுப்பச் சென்றிருந்தபோது, மயக்கமான நிலையில் தலையில் பலத்தகாயங்களுடன் மேற்படி காவலாளி காணப்பட்டாராம்.

இவர் உடனேயே கொழும்பு ஆஸ்பத்திரிக்கு விரைவிக்கப்பட்டு அங்கு நடாத்தப்பட்ட சத்திரசிகிச்சையொன்றின் பின்னர் காலமானார். (இ)

---

# 'வீட்டில்பொருளிருக்கையில் கடைக்குஏன் செல்கிறீர்கள்?'

## மேலதிக அரசாங்க அதிபர் கேட்கிறார்

(கோண்டாவில்)

"வீட்டினுள் பொருட்கள் இருக்கக்கூடியதாக எம் மக்கள் இன்றும் வெளியில் சென்று கடைகளிலேயே பொருட்களை வாங்குகின்றனர் இந்நிலை எமது மக்களிடம் இருந்து மாற்றமடைய வேண்டும். மரக்கறிப் பொருட்களாக இருந்தாலும் சரி மற்றும்உப உணவுப் பொருட்களாக இருந்தாலும்சரி எமது தேவையை நாமே பூர்த்திசெய்துகொள்ள முடியும். இந்நிலையை விட்டுப் பிறரை நம்பி எமது உணவுத் தேவைக்கு நம்பியிருக்கும் நிலைமாற ஒவ்வொரு மனிதனும் உழைக்கவேண்டும்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. இ. பஞ்சலிங்கம் உலக உணவுதினத்தை யொட்டிய பொருட்காட்சி வைத்திறந்துவைத்துப்பேசுகையில் கூறினார். திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில், சமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. பரமலிங்கம் தலைமையில் காட்சி நடைபெற்றது

இப் பொருட்காட்சியில் வட்டுக்கோட்டை மாதர்சங்கங்களினால் உள்ளூர் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டு இருந்தன.

மற்றும் விவசாயத்திணைக்கள உதவிஆணையாளர் திரு. சிவமூர்த்திலிங்கம், நல்லூர் உதவி அரசாங்கஅதிபர் திரு. சபாபதிப்பிள்ளை, சமநல சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் முதலானோர் இப் பொருட்காட்சியில் பங்குபற்றினார்கள். (அ)

---

பாலஸ்தீன

# விடுதலை இயக்கத்துக்கு ராஜீய அந்தஸ்து

மாஸ்கோ, நவம்பர் 1

இங்குள்ள பாலஸ்தீன விடுதலைஇயக்கத்தின் அலுவலகத்துக்கு ராஜதந்திர அந்தஸ்து வழங்கப்பட்டதுடன், சோவியத் பி. எல். ஓ. (பலஸ்தீன விடுதலை இயக்கம்) உறவுகளில் புதிய மாற்றமும் ஏற்பட்டுள்ளது

சோவியத் ஜனாதிபதி லியோனித் பிரெஷ்னேவ், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸிர் அரபாத்தை வரவேற்றது அரபு ராஜதந்திர வட்டாரங்களிலும் சோவியத் யூனியனிலும் மத்தியகிழக்கிலும் பாராட்டப்பட்டுள்ளது.

வாஷிங்டன், மத்தியதரைக் கடல், எகிப்து மற்றும் லிபியா ஆகியவற்றைச் சுற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காரணமாகவே இந்த பதட்டநிலைமை தோன்றுவதாக மாஸ்கோ கருதுகிறது. மாஸ்கோவின் பார்வையில் மத்தியகிழக்கில் அமெரிக்கத் திட்டத்தை நிறைவேற்ற இஸ்ரேல் பிரதான கருவியாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் லிபியத் தலைவர் கடாபி, மாஸ்கோ வந்திருந்தபோதும் வெளியார் தலையீடின்றி மக்கள் தமது பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணும் உரிமையை சோவியத்யூனியன் அங்கீகரிப்பதாக பிரஷ்னேவ் அறிவித்திருந்தார். மத்தியகிழக்குப் பிரச்சினையை தீர்க்க அப்பிராந்திய நாடுகள் கலந்துகொள்ளும் சர்வதேச மாநாடு சிறந்தவழி என்பது அரபாத் விஜயத்தின்போது எடுத்துரைக்கப்பட்டது. இதில் பாலஸ்தீன விடுதலைஇயக்கமும் இடம்பெறவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

---

# நூல்நிலையமாக மாற்றப்பட்டது

(சாவகச்சேரி)

செம்பியன்பற்று வடக்கில் பலகாலமாக இயங்கிவந்த நெசவு நிலையக்கட்டிடத்தை நூல்நிலையமாக இயங்குவதற்கு யாழ் மாவட்ட அமைச்சர் யூ. பி. விஜயக்கோன் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கிராமத்தொழில் இலாகா அத்தியட்சகர் திரு. எஸ். விசுவலிங்கம் மூலமாகச் செம்பியன்பற்று வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இச்சங்கம் பலகாலமாக இப்பகுதி கிராம அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. ஏ. எச். ஏ. ஜீவரத்தினம் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டது. (க)

---

# தம்மை விசாரிக்க தாமே குழு நியமிப்பது சரியா?

## கருணாநிதி கேள்வி

சென்னை, நவம்பர் 1

சாராயக்கடைகள் வைப்பதற்கான லைசென்சுகள் வழங்கியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மீது தெரிவிக்கப்படும் லஞ்சஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மத்திய அரசின் விசாரணைகுழு ஒன்றுதான் விசாரிக்கவேண்டும் என்றும் இந்த ஊழல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசே விசாரணைக்குழு நியமிப்பதில் அர்த்தமில்லையென்றும், தி. மு. க. தலைவரும் தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவருமான திரு மு கருணாநிதி இன்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

முதல்வர் மீதே குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அவரே தம்மை விசாரிக்க விசாரணைக் குழு நியமித்தால், அதிகாரத்தைப் பயன்படுத்தித் தப்பிக் கொள்ள வழிவகுக்கலாம். எனவே முதல்வர் பதவியில் இருந்து விலகிக்கொண்டு மத்திய அரசின் விசாரணைக்குத் தம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

---

# நிர்வாக அதிகாரி நியமனம்

(கோண்டாவில்)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் கொக்குவில் உபபணிமனையின் நிர்வாக பொறுப்பதிகாரியாக யாழ்ப்பாணம் விடமைப்புத்திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. [illegible] மதேவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

துவக்குடன் வந்தவர்களை

# ஆசிரியர் எதிர்த்ததால் கொள்ளைமுயற்சிதோல்வி!

(சங்கானை)

வடலியடைப்பிலுள்ள வீடொன்றில் பயங்கர ஆயுதங்களுடன் சென்ற கொள்ளை கோஷ்டியினரை வீட்டுச் சொந்தக்காரரான தமிழ் ஆசிரியர் எதிர்த்து போராடியதால் கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது.

இச்சம்பவம் பற்றி சங்கானை சன்துறையிலுள்ள சங்கானை பொலிஸ் பிரிவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

துவக்கு, பொல்லு, கடி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் கொள்ளை கோஷ்டியினர் வீட்டு வளவுக்குள் சென்றதும், நாய் குரைத்துச் சத்தம் கேட்கவே வீட்டிலுள்ளோர் நித்திரையை விட்டு எழுந்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

வீட்டுச் சொந்தக்காரரான ஆசிரியர் திடீரென பாய்ந்து, கொள்ளையர் கையிலிருந்த துப்பாக்கியை பிடித்துக்கொண்டாராம். சிறிது நேரம் நடந்த இழுபறியின் பின் கொள்ளையர் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டனராம்.

இதேவேளையில் ஆசிரியர் மனைவியும் பிள்ளைகளும் கூச்சலிடவே கொள்ளையர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## வேலுந்திருக்கையும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தன் மீது தமிழ்ப் பிரபந்தங்கள் ஏராளமாகவுள்ளன. வடக்கில் நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, கந்தவனக்கடவை, உபயகதிர்காமம், குமாரபுரம் முதலிய திருப்பதிகளும்; கிழக்கில் மண்டூர்க் கந்தசுவாமிகோயில், திருக்கோயில் சித்திர வேலாயுதசுவாமி கோயில், பெரியபோரைதீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோயில் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில், சிற்றாண்டிக் கந்தசுவாமி கோயில் முதலியனவும் முருகப்பெருமான் திருவிளையாடல் புரியும் திருப்பதிகளாகும். யாழ்ப்பாணக் கலாசாரம், ஏன் இலங்கைக் கலாசாரம் கந்தபுராண கலாசாரமே. யாழ்ப்பாணத்தாரின் கந்தபுராண படலம், தமிழ்நாட்டுக் கல்விமான்களையே வாயூறவைத்தது. அவர்கள் பலர் காலந்தோறும் யாழ்ப்பாணம் வந்து செவிவாயாகக் கந்தபுராண நயம் பருகினார்கள். நாவலரின் மருகரும் மாணாக்கருமான பொன்னம்பலபிள்ளை கந்தபுராண நயத்துக்குத் தனி நாயகமாய் விளங்கியவர்.

### பழமுதிர்சோலை

அழகர்மலை என்னும் பழமுதிர்சோலை, திருமாலிருங்குன்றம், சோலைமலை முதலிய திருநாமங்களாலும் வழங்கும். சோலைமலை வந்த கந்தப்பெருமானே என்றும், ஆதிச் சோதிமலைப் பதியிற்றிகழ் பெருமானே என்றும் அருணகிரிநாதர் அவர் அருளுவர். திரு. முருகாற்றுப்படை பாடியருளிய நக்கீரர் இம்மலைக்கு ஏற்றங்கொடுத்துப் ''பழமுதிர் சோலைமலை கிழவனே'' என்று குறித்து இம்மலைக்கு உரியவர் முருகனே எனப்பாடி முடிப்பர்.

பழமுதிர் சோலையில் பழைய காலத்து மக்களின் வழிபாட்டு முறைகளை நக்கீரர் பாடுவர். மக்கள் தினையரிசியோடு மலர்களைக் கலந்து படைத்தமையையும், பூசாரி தெய்வப்பித்தேறி ஆவேசித்து ஆடுவதையும் குறிப்பிடுவர். மனம் ஒன்றி வழிபடுபவர்முன் முருகன் தோன்றி அருள்புரிவான் என்பர். முருகனைக் காப்பதற்கு மலைநாட்டு மங்கையர் வெண்சிறுகடுகை நெய்யிற் கலந்து பூசுகின்றனர். முருகன் ஆலயத்துப் பணிப் பெண்கள் பயபக்தியோடு மெதுவாக மந்திரங்களை ஓதியவாறு பணி செய்கின்றனர். குறத்தி சிவந்த நூலைத்தனக்குக் காவலாகப் பாகம் கையிற்கட்டியுள்ளார், அவள் மஞ்சளுடன் வேறு வாசனைப் பொருட்களைக் கைந்து தெளிக்கின்றாள். செவ்வலரி மாலைகளைக் கோயிலிற் கட்டித் தொங்கவிடுகிறாள், அவள் மலைநாட்டைவாழ்த்தி முருகனுக்குத் தூபம் காட்டுகிறார் அவ்வமயம் இனிய வாத்தியங்கள் ஒலிக்கின்றன மலைநாட்டவரின் குறிஞ்சிப் பண்ணில் அவள்பாடல்களைப் பாடுகின்றான். இடையிடையே மலர் கொம்புவாத்தியங்களை ஒலிக்கின்றனர். முருகப்பெருமானின் ஊர்தியாய பிணிமுகம் என்னும் யானையை எல்லோரும் வாழ்த்துகின்றனர்.

நக்கீரர் காலத்தில் சிலம்பாறு அருவி பாய்ந்தபோது யானைத் தந்தம், சந்தனக்கட்டை, மிளகு, வாழைக்குலை, பலாப்பழம் முதலியன மிதந்துவந்தன என்பர். மண்டூகமுனிவர் இங்கே நீராடிப்பெரும்பேறெய்தினார் என்பர். பழமுதிர்சோலை அழகர்மலையெனப் பெயர் பெற்றமையால் அங்கே திருமால் கோயில் உண்டென்பது பெற்றாம். அங்குள்ள திருமாலுக்கு விசேட அருச்சனை நடைபெறுவது வழக்கம். பழமுதிர் சோலையைத் திருமலிவான பழமுதிர்சோலை என்றே அருணகிரிநாதர் பாடுகிறார்.

பழமுதிர் சோலையைத் திருமாலிருஞ்சோலை யெனப்பாடும் பரிபாடல் அதனை மாலிருங்குன்றம் எனப்புகழ்ந்து, அது வீடுபெறுதுறக்கம் என்னும் முத்தியின்பம் பயப்பது என்றும் பாடுகிறது. இம்மலை மிகுந்த அழகுடையது என்றும் திருமால் இங்கே நின்றகோலத்திலுள்ளார் என்றும் கூறும்.

பழமுதிர் சோலையென்று நக்கீரர் பாடியதற்கு நச்சினார்க்கினியர் பழம் முதிர்ந்த சோலை என உரைகண்டுள்ளார் அருணகிரிநாதர் இச்சோலையை ஆதிச்சோலை என்றும், அதுமேகமண்டலத்தோடு ஒருமித்துள்ளது என்றும் பாடுவர். ''அருகிலுள்ள தருக்குலம் மேகத்தோடொருமித்து நெருக்கிய ஆதிச்சோலை மலைப்பதியிற் றிகழ் பெருமாளே'' என்பது பாடலினடி. முருகப்பெருமான் திருவருள் எல்லோருக்கும் கிடைப்பதாக அவர் திருவடி துணை.

### கோரிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கூறும் பொருட்டும் நவம்பர் 3ம் திகதி தொடக்கம் த. வி. கூட்டணி எம், பி. க்கள் பாராளுமன்றக் கூட்டங்களுக்கு செல்ல வேண்டும் மென்றும் த. வி. கூட்டணி பொதுச்சபைதீர்மானிக்கிறது.

''நியாயமான கால எல்லைக்குள் அரசாங்கம் 4 கோரிக்கைகளையும் நிறைவேற்றத் தவறினால் அவற்றை அடையும் பொருட்டு பாராளுமன்றத்துக்கு வெளியில் சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான ஒரு திட்டத்தை தயாரித்து செயற்படுத்துவதென்று சபை தீர்மானிக்கிறது, [மா]

புதுடில்லி நவ.1

அரபிக் கடலில் மையம் கொண்டுள்ள கடும் சூறாவளி குஜராத் கடற்கரை நோக்கி முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ■

## 'அமிர்' புகார்

(யாழ்ப்பாணம்)

மாதகல், பண்டத்தரிப்புப் பகுதிகளில் நேற்று முன்தின மிரவு கடைகள் சேதப்படுத்தியது தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குருநகர் இராணுவ கேர்ணல் கொப்பேகெடுவாவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். [மா]

### ஆனையிறவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி கேட்டு விசாரணை செய்ததாகக் கூறப்படுகிறது

சுமார் ஒரு மணித்தியாலத்தின்பின்னர் அவ்விடத்திற்கு வந்த தடை முகாம் அதிகாரி இவர்களை தாமதித்து வைத்ததற்கு வருத்தம் தெரிவித்ததாக கூறப்படுகிறது. [மா]

### பாராளுமன்றம்,..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கூறினார்.

### சட்டத்தரணி ஆலோசனை

கறுப்புச் சால்வையும் கறுப்புப்பட்டி அணிந்து ஒருநாள் மட்டும் பாராளுமன்றம் சென்றுவிட்டு பின்னர் தொடர்ந்து பகிஷ்கரிக்கவேண்டும் என்று சட்டத்தரணி ஒருவர் தெரிவித்த ஆலோசனை சபையில் பலத்த வரவேற்புக் கிடைத்த போதும் சில பாராளுமன்ற உறுப்பினர் கொடுத்த விளக்கத்தை தொடர்ந்து அந்த ஆலோசனை கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒருநாள் மட்டும் பாராளுமன்றம் செல்வதாலோ, ஒருநாள்மட்டும் சென்றுவிட்டு பின்னர் பகிஷ்கரிப்பதாலோ எவ்விதநன்மையும் ஏற்படப் போவதில்லையென்று கூட்டணி எம். பி. ஒருவர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

### பாராளுமன்றப் பதிவேட்டில்

இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் மக்களபடும்கஷ்டங்கள் பாராளுமன்ற பதிவு ஏட்டில் பதியப்படவேண்டும் என்றும் அப்படியானால்தான் வெளிநாட்டவர்கள் பதிவேட்டின் மூலம், தமிழர் படும் கஷ்டங்களை அறிந்துகொள்வார்களென்றும் மற்றொரு எம். பி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

தினமும் நடக்கும் தாக்குதல்கள் பற்றி உலகிற்கு அறியப்படுத்த தொடர்ந்து பாராளுமன்றம் செல்ல வேண்டியது அவசியமென்றும் அவர் தெரிவித்தாகக் கூறப்படுகிறது,

### தமிழ் மகளிர் பேரவை

தமிழ் மகளிர் பேரவையினர் எவ்வித கருத்தும் வெளியிடாமல் மௌனமாக இருந்ததாக கூறப்படுகிறது.

### பாராளுமன்றம் நாளை கூடும்

நாளை 3ம் திகதி செவ்வாய்க்கிழமை கூட்டணி எம் பிக்கள் பாராளுமன்றம் செல்வார்கள் என்று கூட்டத்தின் இறுதியில் தெரிவிக்கப்பட்டது.

பகிஷ்கரிப்பைக் கைவிடுவதென்ற கூட்டணி பொதுச்சபை முடிவு தொடர்பாக கூட்டணி செயலாளர்நாயகம் திரு அமிர்தலிங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டார்

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபை நேற்று 3 மணித்தியாலமாக பாராளுமன்ற பகிஷ்கரிப்பு சம்பந்தமாக ஆராய்ந்தது.

மலையக விவசாயத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எஸ் தங்கசாமியும் இக்கூட்டத்துக்கு வந்திருந்தார்

[மா-க]

## இப்படியும் நடக்கிறது

கொழும்பிலிருந்து வெளிவரும் 'உபாலி குறுப்'பின் வண்ணமிகு 'தி ஐலன்ட்' வார (கடந்த) இதழில், முதல் பக்கத்து தலைப்புச்செய்தி இவ்விதம் கூறுகிறது:

''தமிழ் மக்களின் நலன் கருதி பாராளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிடுவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நேற்று 'தி ஐலன்ட்'டுக்குத் தெரிவித்துள்ளார்.''

இவ்வாறு நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பக்கத்தில் தலைப்புச்செய்தி வெளியிட்டு 'திரும்புகதென்று தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற அங்கத்தவர்கள் தீர்மானம்' என்று தலைப்புக்கொடுத்துள்ளது 'தி ஐலன்ட்,'

குறிப்பு: தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கூடி, நண்பகலுக்குப்பின்னர்தான், பாராளுமன்றம் திரும்புவதென்று முடிவுசெய்தது.

°° °° °°

யாழ். மாவட்டத்திலுள்ள சில உபதபால் அலுவலகங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் ஒரு ரகக் கடிதங்கள் ஒழுங்காகப் போய்ச் சேருவதாகவும் மற்றைய ரகக் கடிதங்கள் பலசந்தர்ப்பங்களில் அங்குகிடைப்பதில்லை என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகம் (1); 'ஏரோகிரும்' (வான் கடிதம்) ஒழுங்காகப் போய்ச் சேருகிறது. முத்திரை ஒட்டிய கடிதங்கள் சில வேளைகளில் வெளிநாட்டு விலாசதாரருக்குக் கிடைப்பதில்லை.

சந்தேகம் (2); 'ஏரோ கிரு'மின் முத்திரையை அகற்ற முடியாது, முத்திரை ஒட்டிய கடிதங்களில் சுலபமாக விலை உயர்ந்த முத்திரைகளைக் கழற்றமுடியும்!

ஊடுருவி

சாவகச்சேரி நகைக்கொள்ளை:

## எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்! நகைகள் மீட்கப்பட்டன

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகைக்கொள்ளை வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சாவகச்சேரி டச் ரோட்டைச் சேர்ந்த இரத்தினம் நடராசா என்ற இளைஞர் 8,500 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

காரைநகரில் தலைத்திற்கடியிலிருந்துசாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எஸ். இராசேந்திரன் கே. கிருஷ்ணபிள்ளை ஆகியோரால் மீட்கப்பட்ட நகைகள் கோட்டில் பாரம் கொடுக்கப்பட்டது.

நீதிபதி தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 16ம் தேதி ஒத்திவைத்தார். (க)

### பிரிவினை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1977-ம் ஆண்டு யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட முன்வந்தபோது இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரதேசம் இந்தியாவுடன் இணையவேண்டும் என்ற கோரிக்கையை இவர் முன்வைத்தார்

''உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் 25 வருடகாலத்தில் ஓரளவு வெற்றியாவது பெறுவிடில், அக்கட்சி ஒரு காலமும் தனது இறுதி இலட்சியத்தை அடையாது என்பதால், இன்று தொடக்கம் பிரிவினைக் கோரிக்கை கைவிடப்பட்டது'' என்று டாக்டர் தர்மலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (க)

### சுதந்திரம் பெற்றது

அன்ரிகுவா, நவ. 1

கரீபியன் தீவான அன்ரிகுவா சுதந்திரம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை [illegible]

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை கந்தசாமி

வெள்ளாந்தெரு தேனீர்ச்சாலை உரிமையாளரும், 93, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தாமோதரம்பிள்ளை கந்தசாமி நேற்று (1-11-81)ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக்கணவரும் சோமசுந்தரம் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), சண்முகநாதன் (அபுடாபி), காலஞ்சென்ற இரங்கநாதன் (நாதன்ஸ் வேக்சொப், யாழ்ப்பாணம்), யோகநாதன் (நாதன்ஸ் வேக்சொப், யாழ்ப்பாணம்), செல்லையா ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியவேட்சுமி, சுமித்திரா, புவனேஸ்வரி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு பின்னர் அறிவிக்கப்படும். (1350)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ம் ஆண்டு நவம்பர் 2-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889. 8126.